1978 செப்டம்பர் 9]

வந்தபோது ரூ. 320 கொடுக்கப்பட்டதே, எனவே, இப்போது ரூ. 600 என்று விற்கும்போது அதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அனுதாபத்தோடு இந்த அரசு கவனிக்கும்.

(திரு எஸ். கணேசன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25 கேள்விகள் இருக்கின்றன. கேட்கப்பட்ட பிரச்னைகளுக்கெல்லாம் அவர்கள் பதில் அளித்து விட்டார்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

கூட்டுறவுக் கடன்கள் வழங்கல்

*வினு எண் 103—திரு மா. மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் காசோலை வழங்காமல் பணமாக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தற்போது கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நடைமுறையில் உள்ள காசோலை வழங்கும் முறையை ரத்து செய்ய அவசியமில்லை.

திரு. மா. மணிமாறன் : காசோலை வழங்குவதால் கல்வீயறிவு இல்லாத மக்கள் பணம் வாங்கும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. பத்து கிலோ மீட்டருக்கு மேலாகச் சென்று கிளைச் சங்கங்களில் பணம் வாங்கும் இடர்பாடுகள் இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களில் டிரான்ஸ்ஸாக்ஷன் செய்ய தனிப்பட்ட மக்கள் அச்சப்படுகிறார்கள். மூன்று மாத காலம் டிரான்ஸ்ஸாக்ஷன் அதிகமாக இருப்பதன் காரணமாக கூட்டம் அதிகமாகயிருப்பதால் அவர்கள் நேரமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து காசோலை முறையை ஒழித்துவிட்டு எப்போதும்போல் பணமாகப் பட்டுவாடா செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசோலை முறை புகுத்தப்பட்டது சீரிய நோக்கோடு. போலியாக சிலர் காசுகள் பெற்றுவிடுகிறார்கள், கடன் கொடுக்கும்போது அதிகாரமற்ற பிடித்தங்கள் என்ற தவறான முறைகள் கையாளப்படுகிறது. அதோடு விவசாயப் பெருங்குடி மக்கள் வங்கிகளில் கணக்குகள் வைக்கும் பழக்கத்தை

ஊக்குவிக்க வேண்டும், கூட்டுறவு உணர்ச்சியை உருவாக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் இந்தக் காசோலை முறை தமிழக அரசால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : காசோலை கொடுப்பதன் மூலம் எந்தவிதமும் பாதிக்கப்பட்டதாக சொல்பவைகள் நிறுத்தப்படவில்லை. காசோலை கொடுத்த பிற்பாடு செலவுக் காசு, இதரக் காசு என்றும் பிடிக்கப்படுகிறது. ஆகவே, இந்த காசோலை முறையை நிறுத்திப் பணமாகக் கொடுக்கப்படுமா ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட்டு விவரங்களைக் கேட்டால் அதைப்பற்றி விவரங்களை தர முடியும்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களில் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் குத்தகை வார விவசாயிகளுக்கு எந்த சங்கங்களின் மூலமும் கடன் கிடைப்பதில்லை. அப்படியே கடன் கொடுப்பதாக இருந்தாலும் நில உடமைதாரர்களிடமிருந்து இவர் தான் நிலத்தை சாகுபடி செய்கிறார் என்று எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படி வற்புறுத்துவது இப்போதுள்ள நடைமுறைக்கு ஒவ்வாத பிரச்னை. எனவே குத்தகை வார விவசாயிகளுக்கும் நேரடியாக மற்ற விவசாயிகளுக்குக் கிடைப்பது போல் கடன் கிடைக்க அரசாங்கம் உதவி செய்யுமா என்று கேட்டுக் கொள்வதோடு கடன் கொடுக்கும் பொழுது கொடுக்கப்படும் காசோலையை நிறுத்தி பணமாகக் கொடுக்க முன்வருமா என்பதையும் கேட்டுக்கொள்வதோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சுருக்கமாக கேளுங்கள்.

திரு. என். பழனிவேலு : மற்றவர்கள் எல்லாம் நீண்டநேரம் எடுத்துக் கொள்கிறார்கள். நான் ஒரு கேள்வியை மட்டும் கேட்கும்போது இப்படிச் சொல்லி விட்டால் நான் என்ன செய்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உபகேள்வி மூலக் கேள்வியை ஒட்டியதாக இல்லையாதலால், இதில் கேட்ட விவரங்களுக்கு தனிக் கேள்வி போட்டால் அரசுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 9]

திரு. ஏ. ராமலிங்கம்: இந்தக் கூட்டுறவு சங்கங்களில் கொடுக்கப்படும் காசோலையை மாற்றப் போகும்போது, பரிசுப் பத்திரங்களை வாங்கும்படி மத்திய கூட்டுறவு வங்கி வற்புறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாத வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இதுவரையில் அரசுக்கு இப்படிப்பட்ட தகவல் எதுவும் வரவில்லை. இப்படிப்பட்ட முறைகேடுகள் எங்காவது இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து அரசுக்குத் தெரிவிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நில அளவு குறித்த வரை படங்கள்

*வினு எண் 104—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உரிமையாளர்களுக்கு நில அளவு வரை படம் வழங்குவது குறித்துத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு விவசாயிகளிடமிருந்து இதற்காக பத்து ரூபாய் வசூலிக்கப்பட்டது. இதற்கான நில அளவு வரை படங்கள் நிலச் சொந்தக்காரர்களிடம் இல்லாததால் அடிக்கடி வரப்பு தகராறு, நிலத் தகராறு வருகிறது. இதை கிராம அதிகாரிகள் பயன்படுத்திக் கொண்டு விவசாயிகளைத் துன்புறுத்தி வருகிறுர்கள். இதனுல் அடிக்கடி சச்சரவுகள் நடக்கின்றன. கடைசியில் கொலைவரை வந்து முடிகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையில் அரசு கவனம் செலுத்தி வரை படங்கள் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரைப்படத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறுர்கள். இப்போது அடங்கலைப்பற்றியும், கூட்டுப் பட்டாவைப் பற்றியும் கேட்கிறுர்கள் என்று நினைக்கிறேன். கூட்டுப்பட்டா என்றிருந்தால் அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் முறையிட வேண்டியிருக்கிறது. இதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.